# தொண்டன்

ஆரம்பம் - 1969-பெப்ரவரி



பெப்ரவரி-05

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

பெப்ரவரி- 2005

மலர்-37 இதழ்-01



ஆசிரியர்

*J.A.G. இரட்ணகுமார்*

இணை ஆசிரியர்

*மலர்வேந்தன்*

துணை ஆசிரியர்கள்

*மெற்றில்டா இராஜேந்திரம்*

*பெஸ்லீயோ வாஸ்*



வெளியீடு

*சமூகத் தொடர்பு நிலையம்.*

*திரு/ மட். மறை மாவட்டம்*



முகவரி

*சமூகத் தொடர்பு நிலையம்*

*அ.பெ.எண் - 44*

*மட்டக்களப்பு*

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486



*விலை - 15/=*

*ஆண்டு சந்தா : 250/=*

*ஆறுமாதச் சந்தா : 130/=*

*(தபாற்செலவு உட்பட)*


# உள்ளே


| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு | - | 01 |
| தவக்காலம் ஒரு... | - | 02 |
| நான் கண்ட... | - | 04 |
| ஓர் எச்சரிக்கை | - | 06 |
| திருவாசகம்... | - | 08 |
| என்னை மறந்து... | - | 09 |
| ஆழியின் ஊழித் தாண்டவம்... | - | 10 |
| சுனாமி தந்த... | - | 12 |
| மறைந்தும் மனதில்... | - | 14 |
| இன்றைய இளைஞர்களின்... | - | 15 |
| மீண்டும் வருவாயோ | - | 17 |
| இலக்கிய மஞ்சரி | - | 18 |
| மறை அறிவை... | - | 19 |
| வாழ்வு நம் கையில் | - | 20 |
| சீரிய பந்தயம் | - | 21 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| அறிவை வளர்ப்போம் | - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு!

இது கிறீஸ்துவின் திருப்பாடுகளை நினைவு கூரும் தவக்காலம்.
உயிர்ப்பு என்னும் மாபெரும் நிகழ்வுக்கு பாதை அமைத்த காலம் இது.
வாழ்வின் வீழ்ச்சிகள், தடைகள், துன்பங்கள் எல்லாம் இயல்பானவை.
அவை வெற்றிகரமாக எதிர் கொள்ளப்பட வேண்டும்
என்று எடுத்துக் கூறும் காலம்.
"மனுமகன் பாவிகள் கையில் பிடிபடவும்,
இறந்து மூன்றாம் நாள் உயிர்க்கவும் வேண்டும்"
அந்த உயிர்ப்பிலே உலகிற்கே புது வாழ்வு.
இதுவே கிறிஸ்துவின் இலட்சியம்.
இந்த இலட்சிய வெறியே அவர் முள்முடி சூடவும்,
முள் சவுக்கால் அடிபடவும், பாரச்சிலுவை தோளில் சுமக்கவும்,
ஆணிகளால் அறைபட்டு உயிர்விடவும் உறுதியைக் கொடுத்தது;
சிலுவைப் பாரத்தால் வீழ்ந்தபோதும் எழுந்து
நடக்க வலிமையைக் கொடுத்தது.
இது இன்றைய காலகட்டத்தில் நமக்கு மிகவும்
பொருத்தமான வாழ்க்கைப் பாடம்.
கடல்கோள் தந்த பேரழிவு, அகதிமுகாம் வாழ்க்கை,
இழப்புக்கள் தந்த சோகம், உயர்ந்து செல்லும்
வாழ்க்கைச் செலவு, நிச்சயமற்ற அரசியல் நடவடிக்கைகளால்
அதிகரித்துவரும் அச்சவுணர்வு.
உடல் ரீதியாக, உளரீதியாக பாரங்களைச் சுமந்து
கொண்டிருக்கிறது நமது சமூகம்.
ஆனால், சோகங்களுக்குள் சுருண்டு கிடப்பது,
அச்சங்களுக்குள் அடங்கிக் கிடப்பது,
உதவிகளிலேயே தங்கி வாழ்வது அல்ல வாழ்க்கை.
உயிர்ப்பை நோக்கி, புதுவாழ்வை நோக்கி, விடுதலையை நோக்கி
நாம் நடக்க வேண்டும்.
நம்மை அழுத்தும் சோகங்களை, அச்சங்களை, சோம்பேறித்தனங்களை,
அடக்கு முறைகளை நாம் கடக்க வேண்டும்.
இத்தகைய ஒரு 'மனமாற்றம்', ஒரு 'பாஸ்கா' நமக்குத் தேவை.
இத்தவக்காலத்தினூடாக இன்றைய வாழ்வின் யதார்த்தங்களுக்கு நாம் பொருள்
காணவேண்டும்.

**—இணை ஆசிரியர்—**



## இறைவாக்கு

**விழித்தெழு! விழித்தெழு சீயோனே
உன் ஆற்றலை அணிந்து கொள்...
உன் கழுத்தில் உள்ள கட்டுகளை
அவிழ்த்து விடு.**

எசாயா 52/1,2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம் ஒரு போராட்டம்

## -தவக்காலச் சிந்தனை-

தவக்காலத்தில் பல்வேறு சடங்குகள், பக்தி முயற்சிகள், இடம்பெறுகின்றன. இவை தவக்காலத்தின் அடிப்படை நோக்கமான ஆழ்ந்த இதய மனமாற்றத்தை உருவாக்க வேண்டும். இல்லையென்றால் இவையனைத்தும் பயனற்றவை வெளிவேடம்.

இதய மனமாற்றம் என்பது புதுப்படைப்பாக மாறுவதாகும். "ஒருவர் கிறீஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கின்றார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ?" (2 கொரி 5/17) 'கடவுள் உலகத்தைப் படைத்தபோது படைப்புகள் அனைத்துமே மிகவும் நன்றாயிருந்தன. ஆனால் மனிதர் தம் பாவத்தால் கடவுளின் படைப்பைச் சீரழித்தபோது கடவுள் அதை மீண்டும் புதுப்படைப்பாக மாற்றினார்.



நோவாவின் காலத்தில் பாவச்சேற்றில் மூழ்கிக் கிடந்த உலகத்தை வெள்ளப் பெருக்கினால் அழித்துவிட்டு, நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் புதுப்படைப்பின் தொடக்கமாக விளங்கச் செய்தார். வெள்ளப் பெருக்கின் பின் கடவுள் தம் அருளன்பைப் புதுப்பித்து நோவாவுடன் உடன்படிக்கை செய்தார். கடவுள் தாம் நல்லவரென்றும் நேர்மையுள்ளவரென்றும் எளியோரை நேர்வழியில் நடத்தி அவர்களுக்குத் தம் வழியைக் கற்பிப்பவரென்றும் எண்பித்தார்.

வெள்ளப் பெருக்கின்போது காப்பாற்றப்பட்ட நோவாவின் குடும்பத்தினர் எட்டுப்பேரும் தண்ணீர் வழியாகக் காப்பாற்றப்பட்டனர். இத்தண்ணீர் திருமுழுக்கிற்கு முன் அடையாளம் என்கிறார் தூய பேதுரு. தண்ணீருக்கு ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் உண்டு. வெள்ளப் பெருக்கு பாவ உலகை அழித்தது. ஆனால், பேழையிலிருந்த நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றியது. செங்கடல் எகிப்தியரை அழித்தது; ஆனால், இஸ்ராயேல் மக்களுக்கு வழிவிட்டுக் காப்பாற்றியது. திருமுழுக்குத் தண்ணீருக்கும் ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் உண்டு. அது பழைய மனிதனுக்குரிய பாவ இயல்பை அழிக்கிறது. கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனுக்குரிய இயல்பை உருவாக்குகிறது.

தவக்காலத்தின் இறுதிக் குறிக்கோளான இதய மனமாற்றம் இயேசுவின் பாஸ்கா மறைபொருளில், அதாவது அவரது சாவிலும் உயிர்ப்பிலும் பங்கு பெறுவதில் நிறைவடைகிறது. பெரிய சனிக்கிழமை திருவிழிப் புத் திருப் பலியின்போது 'மனந் திரும்புவோர் திருமுழுக்குப் பெறுவர்: ஏற்கெனவே திருமுழுக்குப் பெற்றவர்கள் தங்களது திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொள்வர். நாம் பெற்ற திருமுழுக்கு நம்மிடமிருந்து ஜென்ம பாவத்தைப் போக்கியது. ஆனால், ஜென்மபாவத்தின் விளைவாக நம்முள் குடிகொண்டிருக்கும் பாவ நாட்டங்களையும் பாவத்தின் மீதுள்ள கவர்ச்சியையும் போக்கவில்லை. எனவே, நம் வாழ்வின் இறுதி மூச்சுவரை பாவங்களையும் பாவங்களுக்குக் காரணமான அலகையையும் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. வாழ்க்கை என்பது ஒரு போர்: காயமில்லாத போர் உண்டா? வாழ்க்கை என்பது ஒரு கடல், கொந்தளிக்காத கடல் உண்டா? வாழ்க்கை என்பது ஒரு வேள்வி, தீயில்லாத ஒரு வேள்வி உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்குப் பெற்றும் நாம் சோதிக்கப் படுகிறோமே என்று வியப்படையவோ, வேதனைப் படவோ தேவையில்லை. திருமுழுக்குப் பெற்றவுடனே இயேசு அலகையால் சோதிக்கப் படும்படி அதுவும் ஆவியானவரால் பாலைவனத் திற்கு அனுப்பப்பட்டார் என்று நற்செய்தி கூறுகிறது (மாற்1/12). இயேசு எல்லாவகையிலும் நம்மைப் போல் சோதிக்கப் பட்டார் என்று எபிரேயர் திருமடல் கூறுகின்றது. (எபி 5/15) மாற்குவின் கூற்றுப்படி இயேசு பாலைவனத்தில் காட்டு விலங்குகளிடையே இருந்தார். காட்டு விலங்குகள் தீய சக்திகளைக் குறிக்கின்றன.

நாம் எதிர்த்துப் போராட வேண்டிய காட்டு விலங்குகள் நமக்கு வெளியே மட்டுமன்று நமக்குள்ளேயும் இருக்கின்றன. தெய்வம்பாதி மிருகம்பாதி சேர்த்துச் செய்த கலவை நான். உள்ளே தெய்வம் வெளியே மிருகம் விளங்கமுடியா புதுக்கவிதை நான்' என்கிறது ஒரு திரைப் படப்பாடல்.

ஒரு பெண் குரங்கு குட்டியொன்று ஈன்றதும் அக் குட்டியைப் பார்த்து அழுதது. ஏன் என்று ஆண்குரங்கு கேட்டதற்கு அப்பெண் குரங்கு, 'நமக்குப் பிறந்துள்ள குட்டியின் முகம் மனித முகத்தைக் கொண்டிருக்கிறது' என்றது. அதற்கு ஆண் குரங்கு 'கவலைப்படாதே, போகப் போக நம் முகம் வந்துவிடும்' என்று அதைத் தேற்றியது. மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர வேண்டிய மனிதர் மனித நிலையிலிருந்து மிருக நிலைக்கு தாழ்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. 'நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப் படுவீர்கள். (கலா 5/15)

நம்மை மிருகமாக்கும் அலகையின் வஞ்சகத் தந்திரங்களை மன உறுதியுடன் எதிர்த்துப் போராட வேண்டும். அலகை இயேசுவைச் சோதிப்பதற்காகப் பயன்படுத்திய அதே மூன்று வழிகளைத்தான் நம்மையும் கெடுக்கப்பயன்படுத்துகிறது. 'கற்களை அப்பமாக்கி உடல் இச்சைகளைப் பூர்த்தி செய்துகொள். கோபுரத்தின் உச்சியிலிருந்து குதித்து வல்லமையை வெளிப்படுத்து. அலகையை வழிபட்டு செல்வத்தைக் குவித்து உலக மனைத்தும் தீயோனின் பிடியிலிருக்கிறது என்று கூறும் யோவான் உலகில் இருப்பது எல்லாம் உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு (1 யோவான் 2/16) என்று உலகின் நாடி பிடித்துச் சொல்கிறார். யோவான் குறிப்பிடும் இம்மூன்று சக்திகளும் இயேசுவின் மூன்று சோதனைகளுடன் ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

காமத்திற்காக, பதவிக்காக, பணத்திற் காக மனிதன் நாயாக அலைகிறான்; பேயின் வலையில் வீழ்கிறான்; தன்னையே இழக்கிறான். இயேசு மூன்று முறையும் விவிலியத்திலிருந்து மேற்கோள் காட்டி, கடவுளுடைய வார்த்தையைக் கொண்டே அலகையை வெல்கிறார். நாமும் தூய ஆவி அருளும் கடவுளின் வார்த்தையைப் போர் வாளாக எடுத்து அலகையை வெட்டி வீழ்த்துவோம். பாவத்தை வெல்லுவோம்.

**அருட்பணி . Y. இருதயராஜ்**

## ஒரு வாசகரின் பார்வை

*தொண்டன் நவம்பர் இதழில்' பெஷன் ஒப்த கிறைஸ்ட்' திரைப்பட விமர்சனத்தைப் படித்ததும் இக்கடிதத்தை எழுதுகிறேன்.*


*இயேசுக் கிறீஸ்துவின் திருப்பாடுகளின் காட்சிகளை எந்த வடிவில் பார்த்தாலும் கசிந்து கண்ணீர் மல்காத இதயம் இருக்க முடியாது. இது என் அனுபவம்.*

*ஒரு திரைப்படத்தில் (அன்னை வேளாங்கண்ணி) இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியைக் காட்டுவார்கள். அப்போது தேவமைந்தன் போகின்றான்.... என்ற T.M.S ன் பாட்டு சோகமாக ஒலிக்கும். அந்தப் பாடலும் காட்சிகளும் பார்வையாளர் கண்களில் கண்ணீரைத் தாரைதாரையாக வழியச் செய்யும். எப்போது இப்படத்தை T.V. யில் பார்த்தாலும் இதுவே என் அனுபவமாக இருக்கிறது.*

*அருள்தந்தை A. அருளானந்தம் அவர்களின் பேட்டிக் கட்டுரை படித்தேன். அவரது பணி நமக்கெல்லாம் பெருமை தருவதாகும். நீண்ட நாட்களுக்கு பின் கவிஞர் பெனியின் கவிதை அருமை. எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்ற பாரதியின் உள்ளத் துடிப்புக்களையே இக்கவிதை எதிரொலிக்கிறது. எவ்வளவு நளினமாக இறைவன் படைப்புக்கு இக்கவிதை அஞ்சலி செலுத்துகிறது! உண்மை இறையன்பு கொண்டவருக்கே இத்தகைய உணர்வுகள் வெளிப்படும் 'வாழ்த்துக்கள்! பாராட்டுக்கள்'!*

இரா. நாகலிங்கம் (*அன்புமணி*)
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவனைப் பார்க்க
கிளைமேல் ஏறினாய்.

பணம் மீது
மோகம் கொண்ட நீ
எப்படி - நல்ல
மனம் பார்க்க ஆசைப்பட்டாய்.

ஆசை!
ஆயக்காரனின் ஆசை
ஆண்டவனைப் பார்க்க வேண்டும் - என்ற
அடிமனசின் ஆசை.

அந்த ஆசைதான்
ஆண்டவனே உன் இல்லம் வர
அடித்தளமிட்டதோ!

# நான் கண்ட சக்கேயு

சந்தோஷத்திற்குரிய சக்கேயு
உனக்கென் வணக்கம்.

நற்செய்தியில் - எனக்கு
நண்பர்கள் அதிகம் - நீயோ
என் ரசனைக்குரிய
நல்ல நண்பன்.

நீ...
உருவத்தில் குள்ளன்
ஊரார்க்கு வில்லன்
நீ
தலைமை ஆயக்காரன்
உன்னைக் கண்டால் - பல
தலைகள் மறைந்துவிடும்.
நீயோ - ஒரு

ஆண்டவன் தன்னை
அடையாளம் காட்டுவது
'ஈகோ' வை
இழந்தவர்களுக்குத்தான்.

இயேசு வருகிறார் - என்ற
நிமிஷங்களில் - உன்
கர்வத்தைக் கலைத்தாய்.

நீ
ஆயக்காரன்....
ஆனாலும்
ஆண்டவனைப் பார்க்க - உன்
ஆணவத்தை ஊனமாக்கினாய்.

நீ
பரிசேயர்களை விட
பல படி மேலானவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிருக்கைத் தேடவில்லை
ஒளிந்திருந்து பார்த்ததால் - அருள்
ஒளியைப் பெற்றாய்.

உன்
எளிமையைக் கண்டுதான்
இயேசுவே - உன்
வீட்டிற்கு வர
விண்ணப்பம் செய்தாரோ...?

செய்தியினால்
என்னைக் கவர்ந்த மனமாற்றம்
சின்னப்பருடையதல்ல
சின்னவன் உன்னுடையதுதான்.

என்ன சொன்னாய்?
உடைமையில் பாதியை
ஒடுக்கப்பட்டோர்க்குக் கொடுக்கிறேன்
எவனையாவது ஏமாற்றியிருந்தால்
இரண்டு மடங்காகத் தருகிறேன்.

உன் மனமாற்றம்
சமூக மாற்றத்திற்குச்
சாலைப் போட்டது.

அந்தக் கணத்தில்
சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை
இனங் கண்டு கொண்டாய்.

ஆள்பவன் அடிமை - என
அடையாளம் கண்டாய்.
பணக்காரன் - ஏழை என்ற
பாகுபாட்டைப் பார்த்தாய்.

இறைவன் ஒருவனே
எல்லோர்க்கும் தந்தையெனில்
ஏனிந்த முரண்பாடு?
என்று யோசித்தாயோ?

ஆம்
சமூக மாற்றத்திற்கு
சாலைப் போடாத
மனமாற்றம்
தண்ணீரில் எழுத்து.

பாவியாகப் பார்த்த உன்னை
புனிதனாகப் புரிந்து கொண்டவன்
இயேசு மட்டுந்தான்.

ஆயக்காரனே
அன்பிற்கு அடிபணிந்த
அதிசயம் நிகழ்ந்தது.

நீ
ஒடுக்கும் வர்க்கம்
ஒடுக்கப்படும் வர்க்கத்துடன்
ஒன்றாக இணைய
உதாரணமானவன்.

ஆதலால்தான்
இறைமகன் இயேசுவே
"இன்று இவ்வீட்டிற்கு
மீட்பு உண்டாயிற்று
இவனும் ஆபிரகாமின் மகன்தானே"
என்று உன்னை ஏற்றுக்கொண்டார்.

உன் மன மாற்றம்
எம் மனதை மாற்றி
எம் மன மாற்றத்தால்
சமூகம் மாற
இறைவனிடம் இறைஞ்சு.

—பெனி. சே. ச.—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் எச்சரிக்கை!

பாவிகளின் இரட்சிப்புக்கென பரத்திலிருந்து தரப்பட்ட உயிர்தரும் உணவாகிய இயேசுக் கிறிஸ்து பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்தினால் காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

ஆண்டு மூன்றரையாக அவரோடிருந்த சீடர்கள் பன்னிருவரில் பலதரப்பட்டவர்கள் இருந்தனர். மறுதலிக்கிறவர், சந்தேகிக்கிறவர், பதவிமோகம் கொண்டவர், ஆத்திரப்படுகிறவர், கணக்குப் பார்க்கிறவர், இவ்வாறிருந்த இவர்கள் எல்லோரிலும் முன்னணி வகித்தவன் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசாகும்.



லூக்கா நற்செய்தியாளர் இவனைப் பற்றி எழுதும்போது "அந்நேரத்தில் பன்னிருவருள் ஒருவரான யூதாசு எனப்படும் இஸ்காரியோத்துக்குள் சாத்தான் புகுந்தான். (லூக் 22:3) என்பதாகக் குறிப்பிடுகின்றார்.

யூதாஸ், இயேசுவின் எதிரிகளைச் சந்திக்கின்றான். "நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்" என்கிறான் அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக் காசுகளைக் கொடுக்க உடன்படுகிறார்கள்.

இயேசுவானவர் தமக்கெனத் தெரிந்து கொண்ட ஒரு பங்கை சாத்தான் தெரிந்தெடுக்கின்றான். அக்காலத்திலே யூதேயா, கலிலேயா, சமாரியா பிரதேசங்களிலே உரோமர், குருக்கள், மறைவல்லுனர், படைவீரர் இவர்களுக்கு மத்தியில் சாத்தான் தெரிந்தெடுக்கவல்ல ஒரே குடிமகனாக இவனே இருந்திருக்கின்றான். 'யூதா' என்ற பதத்திற்கு 'இறைதுதி' என்ற பொருள் உண்டு. இறைவனைத் துதிக்கின்றவனாக இருக்க வேண்டிய யூதா, உயிரின் ஊற்றான இறைவனைப் பழிக்கும் எண்ணமுள்ளவனாகவே இருந்திருக்கின்றான்.

யாக்கோபின் மகனாகிய யூதா தன் சகோதரனாகிய யோசேப்பை இருபது வெள்ளிக் காசுக்கு இஸ்மவேலரிடத்தில் விற்றான். ஸ்காரியோத் என்னும் இந்த யூதா தன்னை உருவாக்கினவரும், தன் குருவுமாகிய இயேசுவை முப்பது வெள்ளிக் காசுக்கு விற்றான்.

கிறிஸ்தவர்களாகிய நாம் அடிக்கடி இறை துதியாக 103ம் சங்கீதத்தைப் பாடுகிறோம். எதற்காகத் துதி செலுத்துகிறோம்? அவர் நம் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, நம் நோய்களை எல்லாம் குணமாக்கி, நம் உயிரை அழிவிலிருந்து காத்து நன்மையினால் நம்மை திருப்திபடுத்த வேண்டும் என்பதனால் அல்லவா? இது உண்மையாகவே எம் இதயத்திலிருந்து புறப்படும் இறை துதியா? அல்லது பன்னிருவரில் ஒருவனான யூதாசைப் போல் போலியான வாழ்த்தும் உள்ளத்தில் காட்டிக் கொடுக்கும் துரோகமும் எம்மில் இருக்கின்றதா? எம்மை நாம் சுயபரிசோதனை செய்ய வேண்டும். முதலில் யூதாஸ் சாத்தானுக்குள் புகுந்தான். அதாவது, இயேசுவுக்கு எதிராக சதியாலோசனை செய்யும் கூட்டத்திற்குள் புகுந்து கொண்டான். அதனால் இயேசு அவமானப்பட்டு சாக நேர்ந்தது. சாத்தான் யூதாசுக்குள் புகுந்த காரணத்தால் அவன் துரோகியானது மட்டுமன்றி நான்று கொண்டு சாகவும் நேர்ந்தது.

தேவதாசன் ஜெயசிங்

எமக்காக இறந்த கிறீஸ்து எங்களுக்குள்ளும், நாம் அவருக்குள்ளும் வாழ்கிறோமா? அந்த உயிருள்ள உணவில் பங்கெடுக்கும் நம் ஒவ்வொருவருக்கும் இந்த யூதாசின் வாழ்வு ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்.

கெதனேசர் நாட்டானாகிய லேகியோன் 6000 சாத்தான்களைக் கொண்டவன். மகதலேனா மரியாள் ஏழு சாத்தான்களைக் கொண்டவள். அந்த ஏழும் துரத்தப்பட்டன. ஏன் ஆறாயிரமுமே அகற்றப்பட்டன. ஆனால் இந்த யூதாசுக்குள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புகுந்த ஒரேயொரு சாத்தான் வெளியேற்றப்படவே இல்லை. காரணம், அவர்களுடைய இதயம் திறக்கப் பட்டது. இயேசுவுக்கு அர்ப்பணிக்கப் பட்டது. இவனுடைய இதயம் கல்லாகி அடைப் பட்டது. எனினும் இயேசு அவனை ஏழு தடவைகள் எச்சரித்தார். ஆனாலும் அவன் அதை உணரவில்லை; மனம் மாறவில்லை. பன்னிருவரும் பந்தியிலிருக்கும் வேளையிலே 'என்னோடு உண்பவனே என்மேல் பாய்ந்தான்' என்றார். அதை அவன் உணரவில்லை. இரண்டாவது முறையாக "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்" என்றார். அவன் உணரவில்லை. மீண்டும் "நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்" என்றார். அப்பொழுதும் அவன் உணர்ந்தா னில்லை. நான்காவது தடவையாக ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு. அம்மனிதன் பிறவாதிருந்திருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்றார். அவன் உணர வேயில்லை. அடுத்த படியாக அப்பத் துண்டை அவன் கையில் கொடுத்து குற்றவாளி அவன்தான் என்பதை உறுதிப்படுத்தியும் அவன் இதயம் அணுவளவேனும் அசையவில்லை. ஆறாவதாக 'நானோ' என்று அவன் கேட்ட போது 'நீயே சொல்லிவிட்டாய்' என்றார். அப்போதும் அவன் அசையவில்லை. ஏழாவது தடவையாக "நீ செய்யவிருப்பதை விரைவில் செய்" என்றார். அவன் குணப்படவேயில்லை.

கிறீஸ்தவ சகோதரமே 'சகோதரியே! நீ கடந்து வந்த காலத்திலே, நடந்து வந்த பாதையிலே நீ எத்தனை தரம் இயேசுவினால் எச்சரிக்கப்பட்டாய்? மகதலேனா மரியாளைப் போல் அவரது பாதங்களில் விழுந்தாயா? அல்லது யூதாசைப்போல் இதயத்தை துடைத்துக் கொண்டாயா? மூன்றரை வருடம் அவருடன் உறவாடிய யூதாஸ் ஒரேயொரு தரம் மட்டுமே அவரைக் காட்டிக் கொடுத்தான். நீயோ உன் திருமுழுக்கு நாள் முதல் இன்றுவரை அவருடன் இணைந்து வாழ்கிறாயே! எத்தனை தடவை அவரைக் காட்டிக் கொடுத்தாய்? அடிக்கடி அவருடைய பந்தியில் அமருகின்ற நாம் நம்மையே வினவி விடை பெறுவோம்.

1. அவரோடு கூட (அவருடைய உடலாகிய) அப்பத்தை உண்டு அவருக்கு விரோதமாக, அவருடைய மறையுடலாகிய திருச்சபைக்கு மாறாகச் செயற்படுகிறோமா?
2. அவருடனே கூட அவருடைய பாத்திரத்தில் கையை இட்டு அவரைக் காட்டிக் கொடுக்கின்றோமா?
3. நானோ, நானோ எனக் கேட்டு நமது தவறு களை நமக்குள்ளேயே மழுப்புகிறோமா?
4. தவக்காலத்தைக் கடந்து கொண்டிருக்கும் நாம் அவர் மரணத்திற்குக் காரணமாய் இருக்கிறோமா? அல்லது உயிர்த்தெழுதலில் அவருடன் கூட இணைந்தவர்களாய் இருக்கும்படி செயல்படுகிறோமா?

## கல்

1) ஆந்தை தூங்கும் கல் எது?
பகல்

2) உண்மையான கல் எது?
நகல்

3) மனிதருக்கு வரும் கல் எது?
விக்கல்

4) கேலி செய்யும் கல் எது?
நக்கல்

5) பழுதடைந்த கண்களுக்கு விளங்கும் கல் எது?
மங்கல்

6) தமிழர் கொண்டாடும் கல் எது?
பொங்கல்

7) கணக்கில் வரும் கல் எது?
சிக்கல்

8) வயதானால் முகத்தில் தெரியும் கல் எது?
சுருங்கல்

9) வாய்ப்பாட்டில் உள்ள கல் எது?
பெருக்கல்

செல்வன் – டெம்ஸ்டன் செலர்
தரம் 7, வாழைச்சேனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தைச் சிம்பொனி இசையில் உருவாக்கியுள்ள கத்தோலிக்கக் குருவானவர்

# அருள்தந்தை. ஜெகத் கஸ்பார் அடிகள்



தமிழ் மக்களின் ஆன்மீக, கலை, இலக்கியச் செல்வங்களை அனைத்துலக அளவில் எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் முனைப் போடும் உழைத்துவரும் 'தமிழ் மையத்தின்' பொறுப்பாளர் அருள்தந்தை ஜெகத் கஜ்பார் அவர்கள் இசைஞானி இளையராஜாவின் இசையமைப்பில் பக்தி மணம் கமழும் திருவாசகத்தை இசை வடிவில் தயாரித்துள்ளார்.


"பொதுவாக ஆன்மீக இலக்கியமென்பது மனித மனங்களை அமைதிப்படுத்தும் விதமாக, சாந்தியளிக்கும் விதமாக, கரையாத மனதையும் கரையவைக்கும் விதமாக இருக்கும். அதிலும் குறிப்பாகத் திருவாசகப் பாடல்கள் மனதிற்கு அமைதியும், சுகமும், திருப்தியும், சாந்தமும் தருபவை. திருவாசகத்தைப் பாடினால் உருகாத மனமும் உருகும், கரையாத மனமும் கரையும். அதுமட்டுமன்று உலகம் பொதுவானது. இறைவன் ஒருவனே. மதச் சடங்குகள், சம்பிரதாயங்களை விட இறைவனிடம் சரணாகதி அடைவதே சிறந்தது என்பன போன்ற கருத்துக்களை உள்ளடக்கிய திருவாசகப் பாடல்கள் உலகம் முழுமைக்கும் பொதுவானதாக இருக்கிறது. இந்தப் பாடல்களைப் போன்ற பாடல்கள் இதுவரை நான் படித்த எந்த நூல்களிலும் இல்லை. அதனால்தான் திருவாசகத்தை உலகம் முழுவதும் இசை வடிவமாகக் கொண்டு செல்ல நினைத்தேன் "என்று பேட்டி ஒன்றில் குறிப்பிட் டுள்ளார் கஸ்பார் அடிகள்.

ஏறக்குறைய அறுபது நாட்கள் உழைத்து உலக இசை அறிஞர்களின் வாசிப்போடு மிகச் சிறந்த படைப்பாக இதனைக் கொண்டு வந்திருக்கிறார் இசைஞானி. இருநூறு உலக இசைக் கலைஞர்களின் உழைப்போடு உருவாகி யுள்ள இப்படைப்புக்கு ஏறக்குறைய இரண்டரைக் கோடி ரூபாவுக்கு மேல் செலவாகியுள்ளதாம்.

இந்திய இசைவரலாற்றில் இதுவரை யாரும் செய்திடாத முயற்சியாக இது மிகச் சிரமத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆன்மாவை வருடுகிற, இதயத்தைத் தொடுகின்ற மாதிரியான இசையாக உருவாகியிருக்கின்றதென்று கூறப்படுகின்றது. தற்போது முழுமையான ஒலிநாடா உருவாக்கப்பட்டு வெளியிடத் தயாரான நிலையிலிருக்கின்றது. இது ஏப்ரல் மாதமளவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அருள்தந்தை ஜெகத் கஸ்பார் அவர்கள் பிலிப்பைன்ஸ் மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியின் பொறுப்பாளராக இருந்து ஏழாண்டுகள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி உலகத் தமிழ் மக்களது மனங்களைக் கொள்ளை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- மலர்வேந்தன் -

## வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியின் சிறப்பு மலர்




பிலிப்பைன்சிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி 'இனிய இதயங்களின் உறவுச் சோலை என்னும் பெயரில் சிறப்பு மலரொன்றை வெளியிட்டுள்ளது.

இதில் வெரித்தாஸ் தமிழ்ப் பணித்தலைவர், பொறுப்பாளர், இயக்குனர், இலங்கை ஆயர்களான பேரருள் தந்தை இராயப்பு யோசப், பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரின் ஆசிச் செய்திகளுடன் கலாநிதி ஜெயராஜ் இராசையா அவர்களின் 'ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாறு' என்னும் சிறப்புக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. மேலும் நேயர்களின் ஆக்கங்களுடன் உறவுச் சங்கம நிகழ்வுகளின் படங்களும் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை மறந்து விட்டீர்களா?

நமது திவ்விய இரட்சகர் இயேசுவின் திருக்காயங்களை யிட்டு நாம் பலமுறை தியானம் செய்வதுண்டு. பல மன்றாட்டுக் களைச் சமர்ப்பிப்பதுண்டு. ஆனால் அவரது திருத்தோள் காயத்தையிட்டு நாம் அதிகமாக நினைப்பதில்லை என்பது எனது தாழ்மையான எண்ணம்.

ஆம்! சிலுவை மரத்தினால் பல கோணங்களில் கிழிக்கப்பட்டு, உராயப்பட்டு பாரத்தினால் அழுத்தப்பட்டு நமது கண்களுக்குப் புலனாகா வகையில் அவருக்கு மிக வேதனையை அளித்த திருத்தோள் காயங்கள் எவ்வளவு வேதனை தந்தன. "வயிற்று வலியும் வாதப் பிடிப்பும் வந்தவருக்குத்தான் தெரியும்!

அந்தச் சிலுவை ஒரு உருளையான மரமாயிருந்தால் அதனால் ஏற்படும் வேதனை அவ்வளவு பெரிதல்ல. ஆனால் நான்கு ஓரங்களைக் கொண்ட அந்தச் சிலுவை மரம், அவரது திருத்தோளை உராய்ந்து அதே காயங்களின் மேல் சிலுவை மரம் விழுந்து அழுத்த ஏற்பட்ட வேதனை! இதனை நினைக்க நினைக்க நமதுள்ளம் உருக வில்லையா? ஒவ்வொரு முறையும் விழும்போதும் எழும்போதும் ஏலவே காயப்பட்ட திருத்தோளை மீண்டும் மீண்டும் ஒரே காயத்தில் விழுந்து கிழித்து உராய்ந்து கொடுத்த வேதனையை நாம் உணர்ந்ததுண்டா? ஒரு சிறு வெட்டுக் காயத்தை நம்மால் தாங்க முடிவதில்லையே. அவரது ஐந்து காயங்கள், ஆணியால் ஏற்பட்ட ஆழமான காயங்கள். ஆனால் தோளின் காயமோ பல முறை சிலுவையின் பாரத்தால் அழுத்தப்பட்டு பிளக்கப்பட்டவை யாகும். ஒரு காயமல்ல பல காயங்கள். ஒவ்வொரு முறையும் சிலுவையை அதேவிதமாக வைத்து அழுத்தினார்களா? இல்லை அந்தத் திருத்தோளில் எத்தனை காயங்கள்! பிளவுகள்! திருத்தோள் காயம் என்று குறிப்பிடுகிறோம், அது காயமல்ல - காயங்கள் எனக் குறிப்பிடல் வேண்டும்.

இத்திருத்தோள் காயம் பலமுறை வாளால் அரியப்பட்ட மரம்போல சிலுவையின் பாரத்தால் பலமுறை அழுத்தப்பட்ட காயம். சிலுவை மரம் மேலும் கீழும் இழுபடும்போது அத்தோள் அனுபவித்த வேதனையை நாம் எண்ணிப் பார்த்ததுண்டா? என்னால் முடிந்தால் அக்காயங் களைப் பஞ்சு கொண்டு துடைத்து மருந்து கட்ட மாட்டேனா? ஏன் இப்போதும் மருந்து கட்டலாம். எப்படி? அந்தக் காயங்களை அடிக்கடி நினைத்து இறைவனுக்கு நன்றி கூறலாம். அதனை முன்னிட்டு வேண்டுதல் செய்யலாம். ஒரு காயமல்ல! பலகாயங்கள். ஒவ்வொரு முறையும் சிலுவையை சுமக்கும்போது தோளின் அகலத் துக்கு ஏற்ப சிலுவையும் வைக் கப்பட்டு கிழித்திருக்குமல்லவா?

நாம் இப்போது என்ன செய்யலாம்? நாமும் அக்காயங் களுக்கு ஒத்தடம் கொடுப்போம். அடிக்கடி அக்காயங்களுக்காக நன்றி கூறுவோம். சிலுவையில் அவர் உருவத்தை முத்தமிட்டு நம் அன்பைக் காட்டுவோம்.

-றோஸ் ஜோசப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியின் ஊழித்தாண்டவம் ஒரு சில - வினாக்கள் - - விடைகள் - - வேண்டுதல்கள் -

**-மலர்வேந்தன் -**

மூவொரு இறைவன் திருவடி தொழுது
அருள் பெற நாளும் முனைந்தால்
தீவனை மாயும் தீமையில் கூட
தெய்வத்தின் அன்பு துலங்கும்.

ஆழியே! உன்
ஊழித்தாண்டவத்தால்
உலகம் கலங்கிப் போனது
உயிர்கள் தோன்றியது
உன்னிடத்தில் தானாம்
இது விஞ்ஞான விளக்கம்.

ஆண்டவர் உலகைப்
படைக்குமுன்பே
நீரின் மேல் ஆவி
அசைந்தாடியதாம்
தோற்றத்தின் ஊற்றான நீ
எமக்கு
மாற்றாந் தாயாகியதேன்?

கடலன்னையென்று
காவியத்தில் வைத்தவரின்
உடல் சிதைத்த கோர்மென்ன?
எத்தனை பூசைகள்
எத்தனை பிரார்த்தனைகள்
ஈவிரக்கமற்ற
இந்த அழிவுகளை
இறைவன் கூடத்
தடுக்கவில்லையே!

காற்றை அடக்கி
கடலில் நடந்த தேவன்
கூற்றுவனாய் வந்த
பேரலையை
அடக்காமல் போனதென்ன?
என்று மனம் குழம்பலாம்
ஏங்கித் தவிக்கலாம்
ஆயிரம் ஆண்டுகளாய்
அடங்கிக் கிடந்த கடல்
அலை வீசி எழுந்ததெல்லாம்
அரை மணிப் பொழுதுதானே
ஆனால் அழிந்த உயிர்
எத்தனை ஆயிரங்கள்!

ஆண்டவரே!
அந்த ஒரு பொழுதுக்கு
அர்த்தம் என்னவென்று
அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

நோவவின் காலத்தை
மீண்டும் ஒரு முறை
வா வாவென்றழைத்த
வழியெமக்குப் புரியவில்லை
எந்தச் செயலுக்கும்
எதிர்வினையுண்டென்ற
விதியெமக்குத் தெரிந்தது தான்
இந்த வினைக்கு எது
முன் செய்த வினையென்று
மூளையைக் குழப்புகிறோம்.

பிரிவினைகள் பேசி
பிரிந்து நிற்கும் எமக்கு
இயற்கையின் முன்னே
அனைவரும் சமமென்றாயா?

இயற்கையைச் சூறையாடும்
நுகர்வு வெறிக்கு
இது நீ கொடுத்த எச்சரிக்கையா?

இரும்பாயெழுந்து
விண்தொட்ட மானுடத்தை
என் முன்னே நீ வெறும்
துரும்பென்றாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்தெழும் அலைகள் போல்
வாழ்வும்
வீழும் எழும் அந்த
வீழ்ச்சியும் எழுச்சியும்
வாழ்வின் இயக்கமென்றாயா?

ஆர்ப்பரித்தெழுந்த
ஆழியின் அலைகளில்
ஆயிரம் அர்த்தங்கள்
எமக்குப் புரிகிறது.
முதலுக்கும் முடிவுக்கும்
வாழ்வுக்கும் சாவுக்கும்
நீரே ஆண்டவர்
அனைத்து முடிச்சுகளையும்
அவிழ்க்க வல்லவர் நீர்
துன்பத்திலும் இன்பம்
துளிர்க்கவிடும் வள்ளல்
இப்போது புரியாத
உமது இரகசியங்கள்
எப்போதோ புரியும்
அந்த நம்பிக்கையோடு
ஆண்டவரே வேண்டுகிறோம்.

ஆழி அரவணைத்த
எங்கள் உறவுகளை
அலறித் துடித்த பிஞ்சுகளை
அவலமாய்ப் போன
எங்கள் உடன் பிறப்புகளை
அனைவரையும் அரவணைத்து
உம் வீட்டு வாசல்களை
அவர்களுக்காய்த் திறந்துவிடும்
உம் திருச்சமுகத்தில்
அவர்களை ஆறவிடும்
நித்திய பேரின்பத்தில்
நீடித்து வாழவிடும்.

## பாத்திமா அன்னை காட்சி கொடுத்த அருட் சகோதரி லூசியா காலமானார்

தேவதாயார் காட்சி கொடுத்த மூன்று சிறுவர்களில் ஒருவரான அருட்சகோதரி லூசியா கடந்த 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை போர்த்துக்கல்லில் உள்ள கொயிம்பிரா என்னும் இடத்தில் இருக்கும் கார்மேல் கன்னியர் மடத்தில் தனது 97வது வயதில் காலமானார்.

1917ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி பாத்திமாபதியில் உள்ள ஒரு மலையடிவாரத்தில் மாடுகளை மேயத்துக்கொண்டிருந்த பிரான்சிஸ், ஜெசிந்தா, லூசியா ஆகிய மூன்று சிறார்களுக்குத் தேவதாய் முதல் தடவையாகக் காட்சி கொடுத்தார். இதனைத் தொடர்ந்து ஆறுதடவைகள் இச்சிறார்களுக்குக் காட்சி கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இவர்களில் லூசியாவைத் தவிர்ந்த இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டனர். இவர்களுக்கு 2000 ஆம் ஆண்டு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரினால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

அருட் சகோதரி லூசியா இறந்ததும் போர்த்துக்கல்லில் அரசு தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு மூன்று நாட்கள் தேசிய துக்க தினமாக அறிவித்திருந்தது. அருட் சகோதரியின் பூதவுடல் அவர் வாழ்நாள் முழுக்க வாழ்ந்த கார்மேல் மடத்திலேயே அவரது விருப்பப்படி நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவரது இறுதிச் சடங்கில் பல இலட்சம் மக்கள் பங்குகொண்டனர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுனாமி தந்த சோகங்கள்



சுனாமியால் சூறையாடப்பட்ட புனித பேதுரு ஆலயம் - வாகரை

திருத்தந்தையின் பிரதிநிதி பாதிக்கப்பட்ட மக்களுடன்





சிதைந்து போன வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடல் நீர்
புகுந்த கல்முனை
சிறுவர் இல்லம்

பாதிக்கப்பட்ட
மக்களுக்கு
ஆறுதல் கூறுகிறார்
திரு. மட். ஆயர்.





பாதிக்கப்பட்ட
மக்களைப்
பார்வையிடவந்த
ஆயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மனதில் நிறைந்துள்ள அண்ணன் ஜெயராஜா



திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழு உறுப்பினரும், தொண்டன் சஞ்சிகையின் துணை ஆசிரியரும், வானொலி, மேடை நாடகக் கலைஞரும், கத்தோலிக்க எழுத்தாளருமான திரு. செல்லத்துரை ஜெயராஜா அவர்கள் கடந்த 21ம் திகதி (21.02.2005) காலமானார்.

இளவயது முதல் திருச்சபைப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு ழைத்த இவர் தொண்டன் சஞ்சிகையூடாக எழுத்துத் துறையில் பிரவேசித்தார். தொண்டன் ஆரம்பித்த காலம் முதல் அதன் எழுத்தாளராகவும் கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக தொண்டன் ஆசிரியர் குழுவிலும் இணைந்து தொண்டன் வளர்ச்சிக்காக உழைத்தவர். திரு/மட். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவில் மூத்த உறுப்பினராக கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியாற்றி சமூகத் தொடர்புப் பணிகளில் உற்சாகத்தோடு உழைத்து வந்தார்.

கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளைப் பொறுத்த அளவில் இவரது பங்களிப்பு காத்திர மானது. இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் புதிய உலகம் நிகழ்ச்சிகளில் கடந்த இருபது ஆண்டுளுக்குமேலாக நூற்றுக்கணக்கான நாடகங்கள், உரைச் சித்திரங்கள் போன்றவற்றை எழுதி, நடித்துள்ள இவர் கத்தோலிக்க நற்சிந்தனை களையும் வழங்கியுள்ளார். எழுத்துப் பிரதியைத் தயாரிப்பதிலும், நடிப்பதிலும் சிறந்து விளங்கிய இவரது நாடகங்கள் நிலையத் தயாரிப்பாளர் களாலும், நேயர்களாலும் பாராட்டுப் பெற்றன. இவரது வானொலி நாடகங்களின் ஒரு தொகுதி நூலுருப் பெற்றுள்ளது. மேடை நாடகங்களை எழுதுவதிலும், நடிப்பதிலும் வல்லவரான இவர் 1960களில் மட்டக்களப்பில் இயங்கிய தேனமுத இலக்கிய மன்றத்தில் இணைந்து பல நாடகங்களில் நடித்தவர். அக்காலத்தில் இலங்கை வானொலியில் சிறந்த நாடகத் தயாரிப் பாளராக விளங்கிய 'சானா' எனப்படும் சண்முகநாத னிடம் பயிற்சி பெற்றவர். ஆலயங்கள், பாடசா லைகள், மற்றும் போட்டி நிகழ்வுகள் போன்ற வற்றுக்காக இவரிடம் நாடகங்கள் கேட்டு வரும் பலருக்கு நாடகங்களை எழுதி, பழக்கி ஒத்துழைப்பு வழங்கிய இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

தமது திறமைகளையும், ஆற்றல்களையும் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், தேவைகளுக்காகவுமே பெரிதும் பயன்படுத்திய இவருக்கு திரு. மட்/ மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் 2003ம் ஆண்டு தொடர்பு சாதனை விருது வழங்கிக் கௌரவித்தது. இவரது கலைச் சேவைகளுக்காக மட்/பிரதேச கலாசார பேரவையும் இவரை கௌரவித்தது. இவர் வினைத்திறனும் பொறுப்புணர்வும் மிக்க ஒரு பண்பாளர். இவரது மனைவியும், இரு பிள்ளைகளும் இவரது நாடகத் தயாரிப்பு முயற்சிகளிலே பங்கு கொண்டு ஒத்துழைப்பு வழங்கி வந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. சமயப்பணி, சமூகப்பணி, கலைப்பணி என்று தனது வாழ்வின் இறுதிவரை செயற்பட்ட ஜெயம் அண்ணன் அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் தமது பொன்விழாவைக் கொண்டாடிய மட்/புனித யோசப் முதியோர் இல்லம் வெளியிட்ட பொன்விழாச் சிறப்பு மலரை தயாரிப்பதிலே பெரிதும் பங்களித்திருந்தார். கடமை உணர்வும், செய்நேர்த்தியும் உள்ள அவர்

17ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞரின் இலட்சியத்தலைவர் - ஆமோஸ் -

ஜெருசலேமுக்குத் தெற்கே ஏறத்தாழ 12 •1/2 கல் தூரத்தில் தெகுவே என்ற ஊர் அமைந்துள்ளது. இங்கே தான் ஆமோஸ் என்ற இறைவாக்கினர் தோன்றலானார். இவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு அவர் நூலில் ஒரே ஓர் இடத்தில் காணப்படுகிறது. (ஆமோஸ் 7:14)

"நான் இறைவாக்கினனுமல்லேன், இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனுமல்லேன்; நான் ஆடுமாடு மேய்ப்பவன். காட்டு அத்தி மரங்களைக் கண்காணிப்பவன். ஆடுகளை ஓட்டிக்கொண்டு போன என்னை ஆண்டவன் தெரிந்தெடுத்து தம் மக்களாகிய இஸ்ராயேலிடம் போய், இறைவாக்குக் கூறு என்று அனுப்பினார்."

ஆமோஸ் ஆடு மேய்ப்பதும், காட்டு அத்திமரங்களைப் பயிரிடுவதுமே தனது தொழிலாகக் கொண்டிருந்தார். காட்டு அத்திமரங்கள் தெகுவேயில் அவ்வளவாகப் பயிரிடுவதில்லை. ஏனெனில் தெகுவே உயரமாக உள்ள இடம். எனவே ஆமோஸ் தம் நிலத்தை நடுநிலக் கடல் நோக்கிச் செல்லும் மலைச்சரிவில் அல்லது சாக்கடல் பள்ளத்தாக்கில் கொண்டிருந்திருக்க வேண்டும். ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்ததால் வடநாட்டைச் சந்திக்க வாய்ப்பும் இருந்திருக்கிறது. இவர் நபியும் அல்லர். நபியின் புதல்வர்களில் ஒருவனும் அல்லர். இறைவாக்குரைத்து வாழ்க்கையை நடத்தவுமில்லை. வழிபாட்டு இறைவாக்கினராக விளங்கினார். இவருடைய காலம் ஏறத்தாழ (760-750) யூத நாட்டைச் சார்ந்தவராக இருந்தும் வட நர்ட்டில் இறைவாக்கு உரைக்கிறார்.



2ம் ஜெரோபாவாம் மன்னன் காலத்தில் வடக்கே அசீரியா பலம் பெற்று வந்த காரணத்தினால், சீரியா பலம் குன்றி வந்தது. ஒரு காலத்தில் இஸ்ராயேல் குடியிருந்த பகுதிகளும் இம் மன்னனுடைய ஆட்சிக்குட்பட்டன. இது வடநாட்டு மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. அவனும் சிறந்த போர் வீரன். ஆளும் திறமை உள்ளவன். இவனுடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் அங்கு நிலவிய சமூகச் சூழ்நிலையும் வளர்ச்சியடைந்ததாகக் காணப்படுகிறது. வியாபாரம் வளர்ந்தது. உயர் குடி மக்களுக்கு சுகபோகம் மலிந்தது. இதனால் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே ஏற்றத் தாழ்வு அதிகரித்தது. சமாரியாவிலும், பெத்தலிலும் வாழ்ந்த செல்வந்தர் மாடமாளிகையில் வாழ்ந்துவந்தனர். உடன்படிக்கையின் உறவு மனப்பான்மை அழிந்து, ஏழைகளைப் பணக்காரர் நசுக்கி வந்தனர். நீதி மன்றங்களில் நீதி மறைந்தது. விருந்து களியாட்டம் பெருகியது. கள்ளக் கணக்கு, தராசு போன்றவைகளின் மூலம் செல்வம் சேர்க்கப்பட்டது. பணக்காரரின் வாழ்வு ஏழைகளின் கண்ணீரைப் பெருக்கிற்று. தாண், பெத்தேல் போன்ற இடங்களில் சிலை வழிபாடு, திருவிழாக்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பலிகள் பல ஒப்புக் கொடுக்கப்பட்டன. ஆடம்பரச் சடங்குகள் பெருமிதத்துடன் நடத்தப்பட்டன. இத்தகைய ஆடம்பரச் சடங்குகளைக் கண்டித்து ஆமோஸ் பேசுகிறார்.

ஆமோஸ் மற்ற இறைவாக்கினர்களைப் போல இலக்கிய முறைகளைக் கையாளவில்லை. தம்முடைய காட்சி அனுபவத்தைச் சுருக்கமாகவும், உருக்கமாகவும் கூறுகிறார். கம்பீரத் தொனியுடன் கண்டித்துக் கூறும் அறிவுரைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும், வழக்குரைகளையும் அவருடைய நூலில் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அஞ்சா நெஞ்சம் படைத்தவர். கண்டதை உள்ளவாறே சொல்லச் சற்றும் தயங்காத வீரர். ஏழைகள் ஒடுக்கப்பட்டதைக் கண்டதினால் அவருடைய மறையுரைகளில் கடுமையான சொற்களும், வீரமுழக்கங்களும், அசையாத உண்மைகளும் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம். எனவே தான் இவர் "சமூக நீதியின் இறைவாக்கினர்" என்று அழைக்கப்படுகிறார். மறை போதகப் பணிக்கு முன்னோடியாக விளங்கிய ஆமோஸ் யூத நாட்டைச் சார்ந்தவராக இருந்தும் பரந்த மனப்பான்மை கொண்டவராதலால் இடம், இனம் பாராது வட நாட்டிற்குச் சென்று இறைவாக்கு உரைத்தார். இறைவாக்குப் பணியே அவருடைய முதன் நோக்கமாக இருந்தது. பிழைப்புக்காக இறைவாக்கினர் அல்லர். (7:10-17) அநீதியை எடுத்து இடித்துரைக்கும் இறைவாக்கினர். முகத்தாட்சணியம் பாராதவர். பதவி ஏதும் விரும்பியவரல்லர். கைமாறு எதிர்பார்ப்பவரல்லர்.

இன்றைய சூழ் நிலையில் நம் பங்குகளில் பெரியவர்கள், பணக்காரர்கள், தலைவர்கள் போன்றவர்கள் தவறு செய்தால் தட்டிக் கேட்க அஞ்சுகின்றோம், தயங்குகிறோம். நீதிக்குக் குரல் கொடுக்கப் பயப்படுகிறோம், முகத்தாட்சணியம் பார்க்கிறோம். இனம், சாதி, சமயம் என்றெல்லாம் குறுகிய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுகிறோம். பதவிகள், பட்டங்களை நாடித் தேடி ஓடுகிறோம். ஆடு மேய்த்துக் கொண்டுபோன ஆமோசை அன்று இறைவன் எப்படித் தெரிந்தெடுத்தாரோ அதே போன்று இன்றைய சூழ்நிலையில் உண்மைக்கு, நீதிக்குக் குரல் கொடுக்க நம் ஒவ்வொருவரையும் இறைவன் அழைக்கிறார். கபடற்ற உள்ளத்தோடும், நீதி நேர்மையோடும் இறைவனது குரலுக்குச் செவிமடுப்போம். மக்கள் மத்தியிலே சாதி மத வேறுபாடின்றி சகோதர மனப்பான்மையோடு இறைவாக்கை எடுத்துரைக்க, இறைவனின் அன்பையும் நீதியையும், உண்மையையும் நிலை நாட்ட முன்வருவோம். அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சியத் தலைவர் ஆமோசின் வழிகளைப் பின் பற்றுவோம்.

"நீதி தண்ணீரைப் போல் வழிந்தோடட்டும்
நேர்மை நீரோடைபோல் பாயட்டும்"

(ஆமோஸ் 5:24)

**அருட்செல்வி மேரி றுவீனா**

---

*15ம் பக்க தொடர்ச்சி...*

நோய்வாய்ப்பட்ட நிலையில் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது பார்க்கச் சென்றிருந்தேன். அவரால் இருக்கவோ, பேசவோ முடியவில்லை. கண்களைத் திறந்து நன்றாகப் பார்க்கத் கூட முடியாத அளவுக்கு பலவீனமாக இருந்தார். அந்த நிலையிலும் அவர் என்னிடம் மெதுவான குரலில் 'தம்பி, என்னால் இம்மாதத் தொண்டனுக்குரிய போட்டியை எழுதித்தர முடியவில்லை. நீங்கள் எதிர்பார்த்திருப் பீர்கள், அதுதான் சொல்லியனுப்பியிருந்தேன். தகவல் கிடைத்ததா? என்று கேட்டார். நான் நெகிழ்ந்து போனேன். நேயோடு போராடிக் கொண்டிருந்த அந்த வேளையிலும் தான் ஏற்றுக் கொண்ட கடமையைச் செய்ய முடியவில்லையே என்ற அவரது ஆதங்கம், உரிய நேரத்திற்கு அறிவித்து விட வேண்டும் என்ற பொறுப்புணர்வு என் மனதைத் தொட்டது. அவர் சொல்லிவிட்டவர் எனக்குத் தகவல் தரவில்லை என்பது வேறு விடயம், ஆனால் ஜெயம் அண்ணனைப் போன்று ஆற்றலும், அக்கறையும், பொறுப்புணர்வும் மிக்க மனிதர்களைக் காண்பது மிகவும் அரிது. சுலபத்தில் நிரப்ப முடியாத ஒரு பெரிய வெற்றிடத்தை அவர் விட்டுச் சென்றுள்ளார். எமது பணிகளில் நீண்ட காலத்துக்கு அவரது பாதிப்பு இருக்கப்போவது நிச்சயம். அவரது பிரிவு எமது மறைமாவட்ட கத்தோலிக்க சமூகத்துக்குப் பேரிழப்பாகும். மனிதர்கள் மறையலாம். ஆனால் அவர்கள் செய்த அரிய நற்செயல்கள் மறையாது; மறக்கப்படவும் கூடாது. இறைவன் அளித்த ஆற்றல்களை இறைவன் மகிமைக்காகவே பயன்படுத்தி வாழ்வை முடித்துக்கொண்ட ஜெயம் அண்ணன் அவர்களுக்கு இறைவன் தமது வீட்டில் நிறைவாழ்வு அளிப்பாராக! அவரது மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தவர் அனைவருக்கும் இறைவன்தாமே தேறுதலும், ஆறுதலும் அளித்து வழிநடத்துவாராக!

*- மலர்வேந்தன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டும் வருவாயோ?

- அருட்பணி. N.C. அருள்வரதன் -

அலையே பேரலையே
உந்தன் ஆத்திரம்
அடங்கி விட்டதா!
நிலவுக் காலத்தில்
உன் அலை மோதலைக் கண்டு
ஆனந்தக் களிப்படைய
ஒன்று கூடும் மக்களை
யாரென்றும் பாராது
அள்ளிச் சுருட்டி எறிந்து
அழித்து முடித்துவிட்டாயே

பொல்லாத பெருங்கடலே
நீயே தஞ்சமென
நம்பி உனை வந்த மீனவரை
இன்று வாழ்வே இன்றி
ஒதுக்கிவிட்டாயே!
யுத்தக் கறைபடிந்த மண்ணை
கழுவித் துடைக்கத்தானோ
நீ கடுங்கோபங் கொண்டெழுந்தாயோ!
இல்லையென்றால்
மொழி இன மத பேதங்களை
பொறுக்க முடியாமற்தானோ
உன் கோபத்தை
"சுனாமி" எனக்
கொப்பளித்து முடித்தாயோ!
அதுவுந்தான் இல்லையென்றால்
முன்னுக்குப் பின் முரண்படும்
அரசியலின் போலித்தனங்களை
அழித்து மறைக்கவெனவோ
உன் ஆத்திரம்
அலையெனவே எழுந்து நின்றதோ!

நிலம் நீர் காற்று ஆகாயம்
அத்தனையும் உள்ளடக்கி
உலகைப் படைத்த இறைவன்
அந்த இறைவனையே நினையாது
மறந்து வாழ்ந்த மனிதருக்கு
இறைவன் இருப்பதை
எடுத்துச் சொல்லத்தானோ
அலையே நீ அத்தனை வேகமாய்
ஆரவாரித்து வந்தாயோ!
உண்மைதான் போலும்
பொங்கி எழுந்த பெருங்கடலே
நீ தெரிந்து கழுவவில்லையே!
நல்லது கெட்டது
பெரியது சிறியது
உள்ளது இல்லாதது
படித்தது படியாதது
ஆணோ பெண்ணோ
நகரோ கிராமமோ
இப்படி எத்தனை வரையறைகள்.
அத்தனை வரையறை மீறித்தானே
உன் ஆத்திரம் பெரிதெனக்
காட்டினாய்
அலைகடலே
உன் கோபக் கனலைக்
கண்டும் கேட்டும் பார்த்துமே
இன்னும் இறைவனை
மறந்து வாழ்ந்தால்
மீண்டும் பொங்கியே நீ எழுந்து
எஞ்சி இருப்பதையும் கழுவிவிட
நீ எப்போது வருவாய் என்பதுதான்
எவருக்கும் தெரியாது போனதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆபூரியோன்.

## கடற்கோள்

2004 டிசம்பர் 26, அன்று ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தம், அதன் பயங்கரம், அதனால் ஏற்பட்ட இழப்புகள் என்பன மறக்க முடியாத வடுக்கள். 'சுனாமி' என்ற புதுச் சொல்லினை நாம் தெரிந்து கொள்ள, எம்மால் கொடுக்கப்பட்ட விலை சுமார் நாற்பதாயிரம் உயிர்கள். சுனாமி ஏற்பட முன்னர் கடல் வற்றி மணல் தெரிந்ததுடன் கடல் சுவர்போல் சிறிதுநேரம் அப்படியே நின்றது. இது பழைய ஏற்பாட்டில் மோயீசன், அடிமைகளை எகிப்தில் இருந்து கூட்டிச் செல்கையில் கடல் இரண்டாகப் பிரிந்து வழிவிட்டதனை ஞாபகப்படுத்தியது.

'கடற்கோள்' என்பது நமக்கு புதிய அனுபவம்: அதுவும் பயங்கர அனுபவம்: ஆனால் 'பூம்புகார்' கடல்கோளினால் அழிந்துவிட்டது என்று நாம் கற்றிருக்கின்றோம். இப்போது அவ்வழிவை கற்பனை செய்து பார்க்கக்கூடியதாய் உள்ளது.

முதலாவது கடல்கோள் கபாடபுரத்திலும், இரண்டாவது கடல்கோள் வடமதுரையிலும் ஏற்பட்டதாக பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் தனது 'சுனாமி' தொடர்பான அனுபவக்குறிப்பில் கூறுகின்றார். தமிழ் இலக்கிய வரலாற்றில்தான் முதலாவது, இரண்டாவது என ஏற்பட்ட கடல் கோள்களைப் பற்றி அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே கடல்கோள்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ந.சி. கந்தையா பிள்ளை என்பவர் 'தமிழர் பழம் சரித்திரம்' என்னும் நூலொன்றை எழுதியுள்ளார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் இதற்கு முன்னுரை எழுதியுள்ளார். முதலாம் பதிப்பு 1939.03.05ல் வெளியிடப்பட்டது. அதன் மூன்றாம் பதிப்பு வாசிக்கக் கிடைத்தது. அதில் 32ம், 33ம் பக்கங்களில், மொகஞ்சதரோ, அரப்பா, சங்குதாரோ முதலிய தமிழருடைய பழைய நகரங்களின் அழிவுக்கே காரணம் வெள்ளப் பெருக்கேயன்றி படையெடுப்பு அன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று நமக்குக் கிடைக்கும் மிகப்பழைய இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். அதற்கு முந்திய இலக்கண நூல்கள் கறையான் களினாலும், கடற்கோள்களினாலும் அழிந்து விட்டதாக சிலகுறிப்புகள் கூறுகின்றன; அகத்தியமும் இதில் அடங்கும்.

இணையத்தில், சுனாமியைப் பற்றிய கட்டுரையொன்றில் நம்மாழ்வார் பாடலொன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆழி எழச்சங்கும் வில்லும் எழுத்திசை
வாழி எழத் தண்டும் வாளும் எழ அப்பன்
ஊழியெழ உலகம் கண்டவாறே"

தற்கால இலக்கிய வரலாற்றிலும் கடற்கோளானது இலக்கியக் கருப்பொருளாகிவிட்டது. வைரமுத்து, கலைஞர் கருணாநிதி தொடக்கம் நம்மூர் கையெழுத்துச் சஞ்சிகைக் கவிஞர்கள் வரைக்கும் கடற்கோளானது கவிதையாகிப் போயிற்று. மரபுக்கவிதை, புதுக்கவிதை, கைக்கூ கவிதை என்ற வடிவங்களை எல்லாம் முகமூடியாக எடுத்துப்போட்டுக் கொண்டது.

ஆனால் இங்கும் வேற்று மொழிக்கலப்பு. ஆம்! கடற்கோள் என்பது மெல்ல வழக்கொழிந்து சுனாமியாகிப் போனது.

## அஞ்சலித்தோம்!



தொண்டன் துணை ஆசிரியர்களில் ஒருவரும் திரு.மட்.மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு உறுப்பினரும், நாடகக் கலைஞரும், எழுத்தாளருமான திரு. செல்லத்துரை ஜெயராஜா அவர்கள் கடந்த 21ம் திகதி (21-02-2005) காலமானார். அன்னாருக்குத் தொண்டன் துயரம் தோய்ந்த அஞ்சலியைச் செலுத்துவதோடு இறை சந்நிதியில் நிறைவாழ்வு காண இறைஞ்சுகிறது.

*- தொண்டன் ஆசிரிய குழுவினர் மற்றும் சமூகத் தொடர்பு ஆணைக்குழு உறுப்பினர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மீட்பர் இயேசு

காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1/15) எதிர்பார்த்திருந்த மீட்பரின் குரலொலி இது. யூத மக்கள் மீட்பர் உயர்ந்த சீமானாகப் பிறப்பார் எனக் காத்திருந்தது நிறைவேறவில்லை. நாசரேத் எனும் ஊரில் ஓர் ஏழைக்குடும்பத்தில் அவர் பிறந்தார். 30 வருடங்களாக மறைவாக வாழ்ந்தார். திருமுழுக்கு யோவானின் கரத்தால் யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றார். அத்துடன் தனது பகிரங்க வாழ்வையும் ஆரம்பித்தார். இவரது திருமுழுக்கின் போது அதிசயமொன்று நிகழ்ந்தது. தூய ஆவியார் புறா வடிவில் வெளிப்பட்டார். இறைத்தந்தையின் குரலொலி "இவரே எனது அன்பார்ந்த மகன். இவரில் நான் பூரிப்படைகின்றேன்" எனக் கேட்டது. இதனால், கிறிஸ்து இறைமகன் என்பது வெளிப்படுத்தப்பட்டது. பின்னர் பாலைவனத்திற்குச் சென்று 40 நாட்கள் செபத்திலும், உபவாசத்திலும் கழித்தார். இவ்விதமாகத் தம் ஆன்மீகத்தை வலுப்படுத்திக் கொண்டார்.

தம் பணி என்னவென்று விளங்கிக் கொண்டு, அவ்விடமிருந்து நற்செய்தியைப் போதித்துக்கொண்டு கலிலேயாவிலுள்ள நாசரேத் எனும் ஊருக்கு வந்தார். இவ்வூரிலேயே இயேசு வளர்ந்தார். இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். (லூக்கா 2/52)

முதலில் நாசரேத்தூர் செபக்கூடத்திற்கு வந்த இயேசு எசாயா இறைவாக்கினரின் ஏட்டைத் திறந்து வாசித்தார். "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்க மிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக்கா 4:18-19) இவற்றை வாசித்த பின் "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" (லூக்கா 4/21) என்றார். இப்பகுதியின் வாயிலாக இறைவாக்கினர் எசாயா கூறிய மீட்பர் தானே என்பதை வெளிப்படுத்தினார். அங்கு கூடியிருந்தவர்கள் அதனை ஏற்கவில்லை. இறைவாக்கினர் எவரும் தமது சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை எனக் கூறி இயேசு அவ்விடத்தை விட்டகன்றார்.

இதன் பின்னர் நாசரேத்தூர்ச் செபக்கூடத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற இயேசு ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு நற்செய்தியைப் போதித்தார். கலிலேயா கடற்கரை, மலைச் சமவெளி ஆகிய பற்பல இடங்களில் மக்கள் கூடி அவருடைய போதனையைக் கேட்டனர். ஒவ்வொருவரினதும் அறிவுக்கு விளங்கும் வகையில் அவர் போதித்தார். சாதாரண மக்களுக்குப் போதிக்கும்போது உவமைக் கதைகளையும், இயற்கைச் சூழலையும் பயன்படுத்தினார். அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்து முகமாகப் பல புதுமைகளையும் செய்தார்.

இயேசுவின் போதனையில் மிகமுக்கிய மானது "மலைப்பொழிவு" ஆகும். புனித மத்தேயு இதனை "மலைப்பொழி'வென்றும், புனித லூக்கா "சமவெளிப் பொழி" வென்றும் குறிப்பிடுகின்றனர்.

**மலைப்பொழிவில் அடங்கியுள்ள கருத்துக்கள்:**

* மறையியல் சட்டங்களான எட்டுப்பேறுகள்.
* பகைவரையும் அன்பு செய்தல்
* பகிர்ந்து கொள்ளுதல்
* அனைவருக்காகவும் வேண்டுதல்
* இரக்கம்
* பிறரைத் தீர்ப்பிடாமை
* தனது குற்றத்தைத் திருத்திக் கொள்ளுதல்

**இறையரசின் மதிப்பீடுகள்**

* இறைவனில் தங்கியிருத்தல்
* தூய்மை * ஒற்றுமை * நீதி

மெற்றில்டா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - வாழ்வு நம் கையில் -
## மட்டக்களப்பில் திருமறைக்கலாமன்றம் நடத்திய சுனாமியின் 31ம்நாள் நிகழ்வு

ஆழிப்பேரலையின் அகோரத் தாண்டவத்தில் விலைமதிப்பற்ற மனித உயிர்கள், சின்னா பின்னமாக்கப்பட்டு சீரழிக்கப்பட்டதை நினைத்துப் பார்க்கின்ற ஒவ்வொரு நொடிப்பொழுதும் மெய் சிலிர்த்துப் போகிறது.



ஆம், சுனாமி என்ற பெயரில் எமது தேசத்தையும், உறவுகளையும் உருத்தெரியாமல் அழித்தொழித்துச் சென்ற கோரக்காட்சி இன்னும் எம் இதயங்களில் நீங்கா வடுக்களாய்....

இதனையொட்டி மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றம், "வாழ்வு நம் கையில்" என்கின்ற தொனிப் பொருளில், சுனாமி அனர்த்தத்தை நினைவு கூரும் வகையில் 26 - 01 - 2005 அன்று சர்வமதப் பிரார்த்தனையையும், அஞ்சலிக் கூட்டத்தையும் மட்டக்களப்பு பிரதானநகர காந்தி சதுக்கத்தின் முன்பாக நடாத்தியிருந்தது.

மட்டக்களப்பு திருமறைக் கலா மன்ற இணைப்பாளர் திரு. எஸ். ஜே. வி. வள்ளுவன் சுவாமிநாதன் அவர்களின் வழிகாட்டலில், பல் சமயத் தலைவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதுகாப்பு அதிகாரிகள், மற்றும் மொனறாகலை, ஹம்பாந்தோட்ட பகுதிகளிலிருந்து 60ற்கும் மேற்பட்ட திருமறைக் கலாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், வெளி நாட்டவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இந்நிகழ்விற்கு வலுவூட்டியி ருந்தார்கள்.

இதில், மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேன்மைமிகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தனது விசேட அஞ்சலி உரையில், அனர்த்தத்தால் உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்ம சாந்திவேண்டியும், உறவுகளை இழந்து அனாதைகளாய்ப் பரிதவிக்கும் உள்ளங்களுக்கு அமைதி வேண்டியும், தமிழிலும், சிங்களத்திலும் அஞ்சலி உரையினை நிகழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல், இந்து, கத்தோலிக்க, பௌத்த, இஸ்லாம் மதம் சார்ந்த தலைவர்களும், தத்தமது அஞ்சலி உரையையும் பிரார்த்தனையும் நிகழ்த்தியிருந்தது மற்றுமொரு அம்சமாகும்.

இந்நிகழ்வினூடாக மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து - சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து அவர்களின் ஆறாத்துயரில் பங்கெடுத்து ஆத்ம சாந்தி வேண்டி நின்றனர். அதனை அடுத்து திருமறைக் கலாமன்றக் கலைஞர்களால் அளிக்கை செய்யப்பட்ட "நாம் வாழப் பிறந்தோம்" என்னும் நாடகம், மேடை நாடகத்திற்கும், வீதி நாடகத்திற்கும் இடையிலான ஒரு வித்தியாசமான சகலரதும் கவனத்தை ஈர்த்த நாடக அளிக்கையாக இருந்தது. இந்நாடக முடிவில் இறந்த ஆன்மாக்களுக்கு அஞ்சலி செலுத்த தீபம் ஏற்றபட்டு நாம் வாழப்பிறந்தவர்கள் என்ற உறுதியோடு இந்நிகழ்ச்சி இனிதுற நிறைவுற்றிருந்த வேளையிலும் மக்கள் அவ்விடத்தை விட்டு அகல மனம் இல்லாமல்



கண்ணீருடன் அங்கு ஏிக்கப்பட்ட மரக்கட்டை யை பார்த்து விம்மி அழுத வண்ணம் நின்றதைக் காணக்கூடியதாகவும் இருந்தது.

ஒட்டுமொத்தத்தில் இந்நிகழ்வு சமாதானத்தை நோக்கிய முன்னகர்வுகளில் ஒன்றாக அமைந்திருந்தது.

-துங்கராசா விக்னேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீரிய பந்தயம்...

உலகம் நாளுக்கு நாள் முன்னேறும் காலம் இது. பல விதமான விந்தைகளை நாம் எந்நாளும் காணக்கூடியதாய் உள்ளது. மனித மாண்பு அழிக்கப்படுகின்றதே ஒழிய காக்கப்படவில்லை. பயமும் பீதியும் மக்களை ஒருமித்து நாளுக்கு நாள் அலைக்கழித்த வண்ணம் இருக்கின்றன. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டளவில் சின்னப்பர்தான் அமைத்த திருச்சபைக்குக் கூறிய சில வார்த்தைகள் எம் நெஞ்சை உறுத்துகின்றன.

அதாவது சீரிய பந்தயத்தில் ஓடுகின்றோம். அப்பந்தயத்தில் நாம் சிறந்த முறையில் ஓடி முடிக்க வேண்டும். பந்தயம் எனும்பொழுது எமக்கு ஒரு குறிக்கோளுண்டு. அதை அடைய வேண்டும். வெறும் பரிசுக்காக ஓடும் பந்தயம் இதுவல்ல. ஆன்மீகத்தைத் தேடி ஓடும் பந்தயமே இதுவாகும். சின்னப்பர் தனது பந்தயத்தில் எதிர்நோக்கியது போன்ற எதிர்ப்பை நாம் எதிர் கொள்ளவே முடியாது. அப்படியிருந்தும் அவர் தான் ஓட ஆரம்பித்ததை ஓடியே முடித்தார். எமக்கும் எதிர்ப்புகள் உண்டு. எம்மனம் எண்ணின் அதை இலகுவாக வெல்ல முடியும்.



வாழ்க்கை என்பது ஒரு நொடிப் பொழுதில் தோன்றி மறையும் நீர்க் குமிழிக்கு ஒப்பானது. தண்ணீரில் தோன்றும் நீர்க்குமிழி ஒரு காலமும் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்பதில்லை. அது தோன்றிய மறு வினாடியே மறைந்து விடுகின்றது. மனித வாழ்க்கையும் இப்படிப்பட்டதே, நாம் எவ்வளவுதான் ஆடம்பரமாக வாழ்ந்தாலும் காலதேவன் திடீரென அழைத்து விடுவான். அவ்வேளையில் நாம் எங்கு சென்றாலும் தப்பமுடியாது.

இவ்வுலகத்தில் மனிதன் ஒவ்வொருவனும் தன்னைத்தானே மறந்து பிறர் நலம் கொண்டு வாழவேண்டும். மனிதன் தன்னைப்போல பிற உயிர்களையும் மதித்து வாழ்வது மேன்மையிலும் மேன்மை. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளை எடுத்து நோக்கின் அங்கே மனித மாண்பு பற்றி மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாய் உள்ளது.

மனித மாண்பு எப்படிப்பட்டது, மனிதன் ஏன் ஒவ்வொரு மனிதனையும் மதித்து வாழவேண்டும் என்பதை இந்நூலில் நாம் காணமுடிகிறது. இதற்காகத்தான் எம்பிரான் இயேசு இப்புவியிலே மனித அவதாரம் எடுத்து தன்னையே வெறுமையாக்கி சிலுவையில் எமக்காகப் பலியானார்.

இன்று மனிதன் தன்பிற சகோதரனை மதிக்காது, அவனுடைய மாண்பினை உணராது சுயநலப் பேயால் ஆட்கொள்ளப்பட்டவனாய் காட்சி தருகின்றான். இதற்குக் காரணம் என்ன என்று எம்மை நாமே கேட்டுப்பார்த்தால் விடை கிடைக்கும். அதாவது, மனிதன் தான் மட்டும் உயர வேண்டும், தான் மட்டும் வாழ வேண்டும், தான் மட்டும் இவ்வுலகில் போற்றப்படவேண்டும் என்றவாறு சிந்தித்து மற்றவர்களை அழிக்க முற்படுகின்றான். இவை இன்று எம் சமுதாயத்தில் தலைவிரித்து ஆடுகின்றன. இவை சீரிய பந்தயத்தில் ஓடுகின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஏற்றதாக அமையாது.

கிறீஸ்தவ வாழ்வு என்பதற்கு அர்த்தம் உண்டு; ஒரு சிறப்பு உண்டு. ஏனோ பிறந்தோம்; ஏனோ வாழ்ந்துவிட்டுப் போவோம் என்பது கிறிஸ்தவ வாழ்வன்று. கிறிஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் ஓர்அழைப்பு உண்டு. எனவே அவ்வழைப்பை ஏற்று அதன்படி வாழ்வதே கிறீஸ்தவ வாழ்வு. அதாவது இறைமகன் இயேசு எமக்காய்த் தன் உயிரை அளித்தார் என்றால் நாம் அவருக்குச் சாட்சிகளாய் வாழ அழைக்கப் பட்டிருக்கின்றோம். இதுதான் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பந்தயம்.

எம் வாழ்வு பிறருக்கு ஒளியாய் அமைய வேண்டும் என்று இயேசு கூறியுள்ளார். எம் வாழ்வு பிறருக்கு ஒளியாய் அமையவேண்டுமெனின், நாம் எமக்குரிய பந்தயத்தில் சீரிய முறையில் இறுதிவரைக்கும் மனம் கோணாது, வாழ்வு கோணாது ஓடி முடிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் புனித சின்னப்பர் கூறியது போல் இயேசுவை தலையாய் கொண்ட உடம்பாவோம்.

ஸ்ரீதார் குரூஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 35

போகவிட, நீ, நான், இன்னும், இங்கிருந்து,
இதுவே, புறப்பட்டு, எகிப்து, உள்ள, மக்கள்

## அறிவை வளர்ப்போம் - 35

1) சுவிச்சர்லாந்து
2) விஜயன்
3) 447 கி.மீ
4) மிஸ்ரசாபு
5) சீனா
6) பஞ்சாப்

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து நூறு ரூபா பரிசு பெறுவோர்!**

- தயாளன் அல்பேர்ட் கிறிஸ்டியன்
  இல: 26, வேளாங்கண்ணி வீதி,
  பாலையூற்று,
  திருகோணமலை.
- அ. மைக்கல் ராஜ்
  தாகா நகர்
  மூதூர் - 7

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து ஐம்பது ரூபா பெறுவோர்!**

- வி. வேஜினி வினித்தா
  30, சிறில் ஒழுங்கை
  தாண்டவன்வெளி,
  மட்டக்களப்பு.
- A. டானியல்
  இல: 232/3, அளுத்மாவத்த வீதி,
  கொழும்பு - 15

**பாராட்டுப் பெறுவோர்**

- ரூபகீர்த்தி வொன் ஜீன்
  இல 140, எல்லை வீதி,
  செங்கலடி.
- T. சுதர்சன்
  112, அம்மன் கோவில் வீதி,
  கல்முனை - 02

**போட்டியில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.**

(ஆ - ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளைகளுக்கு மட்டும்**

முடிவுத்திகதி
**30 - 03 - 2005**




# விவிலியம் கற்போம் - 37

**(விடுதலைப் பயணம் 13: 11–18)**

**(பொருத்தமான சொற்களால் இடைவெளிகளை நிரப்புக)**

உனக்கும் உன் மூதாதையருக்கும் ஆண்டவர் வாக்களித்தபடியே அவர் ........................ நாட்டிற்குள் உன்னை அழைத்துச் சென்று அதை உனக்குக் கொடுக்கும்போது, கருப்பையைத் திறக்கும் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கென ஒப்புக்கொடுக்கப்படவேண்டும். ஓர் ஆட்டைக் கொடுத்து ........................ ஆண் தலையீற்றை மீட்பாய். "இதன் பொருள் என்ன" என்று பிற்காலத்தில் உன் மகன் உன்னிடம் கேட்டால்," ........................ தம் கைவன்மையால் அடிமை வீடாகிய எகிப்திலிருந்து எம்மை வெளியேறச் செய்தார். ........................ மனமிறுகி எம்மைப் போகவிட மறுத்த போது, எகிப்து நாட்டிலுள்ள மனிதருள் தலைப்பேறு தொடங்கி ஆண் தலைப்பிறப்பு அனைத்தையும் ஆண்டவர் ........................ எனவே, ஆண்பிறப்பு அனைத்தையும் நான் ஆண்டவருக்குப் பலியிட்டு தலைப்பேறு அனைத்தையும் ........................" என்று சொல். இது உன்கையில் அடையாளமாகவும் உன் கண்களுக்கிடையில் சீட்டுப்பட்டமாகவும் அமையட்டும். ஏனெனில், தம் கைவன்மையால் ஆண்டவர் எம்மை ........................ வெளியேற வைத்தார். மக்களைப் பார்வோன் அனுப்பியபோது, பெலிஸ்தியர் நாட்டு ........................ நேர்வழி எனினும் அதன் வழியாகக் கடவுள் அவர்களை நடத்திச் செல்லவில்லை. ஏனெனில் "........................ கண்டு இம் மக்கள் மனம் தளர்ந்து, எகிப்திற்கே திரும்பி விடுவார்கள்" என்றார் கடவுள். கடவுள் மக்களை பாலைவனச் சுற்றுவழியாக செங்கடலுக்குப் போகச் செய்தார். ........................ மக்கள் படை அணிபோல எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிச் சென்றனர்.

**விடைகள்: எகிப்திலிருந்து, ஆண்டவர், சாகடித்தார், இஸ்ரயேல், கானானியரின், போரை, கழுதையின், நெடுஞ்சாலைதான், பார்வோன், மீட்கிறேன்.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம் – 37

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகின் மிகச் சிறிய நாடு
   (வத்திக்கான், மொனொகோ, பிபில்ட்ரா)

2. அந்தமான் தீவுகள் எந்த நாட்டிற்குச் சொந்தமானவை?
   (மாலைதீவு, பாகிஸ்தான், இந்தியா)

3. மனித உடலில் கழுத்துப் பகுதியிலிருக்கும் சுரப்பியின் பெயர்
   (தைமஸ்,தைரொய்ட், பீனியல்)

4. 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா'' என்ற - பாடலை இயற்றியவர்
   (கண்ணதாசன், வாலி, சுப்ரமணிய பாரதியார்)

5. உலகின் மிகப்பெரிய பல்கலைக்கழகம்
   (கேம்பிரிஜ் பல்கலைக்கழகம், அமெரிக்க அரச பல்கலைக்கழகம், கல்கத்தா பல்கலைக்கழகம்)

6. பாலைவனக் கப்பல் என்று அழைக்கப்படுவது
   (குதிரை, தீக்கோழி, ஒட்டகம்)

பெயர் : ................................................................................................

முகவரி : ................................................................................................

................................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்–37
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு



மண்ணில் 12 - 04 - 1937

விண்ணில் 26 - 02 - 2004

**திருமதி.மேரி.திரேசா பஸ்தியான்பிள்ளை**

தன்னலம் கருதாது பிறர்நலம் பெரிதென்று
அன்பு வழியில் வாழ்ந்திட்ட உத்தமி.
இன்றுலகில் இல்லைத்தான் - என்றாலும் எங்கள்
இதயமெல்லாம் நீங்காது இருக்கின்றாரே.

வித்தகனாம் இறைபாதம் சேர்ந்து ஓராண்டில்
விண்ணரசில் மகிமை பெற்று விட்டீரம்மா
இறைவன் மலரடியும் சுற்றம் நல்லுறவும்
பேறென நினைத்து நடந்த வழியிலே
தடம் பதித்து நடக்கின்றோம் நாங்களம்மா.

"உயிர்ப்பும் உயிரும் நானே,
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"
(யோவான் 11:25)



உங்கள் நினைவில்
வாழும்
மகன், மகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

# காற்றில் கலந்து வரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்

## மார்ச் – 2005

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – நேரம் காலை 5.50 மணி.**

நாள்: 5,6,7,8 - போதகர் T.T. பிரான்சிஸ்

9,10,11 - அருள்தந்தை J. மொறாயஸ்

19,20,21,22 - திரு. ஆனந்தா A.G. இராஜேந்திரம்

23,24,25 - அருள் சகோ. பிரைனர் செலர்

**சிறுவர் உலகம் – நேரம் மாலை 06.30 மணி**

நாள்: 01,15

29 - திருமதி. புவனேஸ்வரி அகஸ்டின்

**புதிய உலகம் – நேரம் மாலை 6.30 மணி**

13,27.

**புனித வார சிறப்பு நிகழ்ச்சிகள்**

20,24,25,26,27.

நேர்முக அஞ்சல் -

27ம் திகதி காலை 7.30 மணிக்கு மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, புனித யோசப் முதியோர் இல்ல ஆலயத்திலிருந்து உயிர்ப்பு வழிபாடு நேர்முக அஞ்சல் செய்யப்படும்.

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொகுப்பு: சமூகத்தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

*Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org